**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை: திரு. வி. பாலசுப்பிரமணியன், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2024-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2-ஆம் நாள் திங்கட்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ குரோதி வருடம் ஆவணி மாதம் 17-ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண்.443/2023-ல்**
**இடைநிலை மனு எண்.3/2024**

*****

கருப்பையாதேவர் … மனுதார்/வாதி

/எதிர்/

பூபதிராஜ் … எதிர்மனுதார்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 14.08.2024 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது, மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர். P. செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாத நிலையில், எதிர்மனுதாரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், தரப்பினர்கள் தரப்பில் முன்னிடப்பட்டிருக்கும் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், மனுதார் தரப்பு வாதுரையை கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உ த் த ர வு**

எதிர்மனுதாரிடமிருந்து மனுதாருக்கு வரவேண்டிய தொகையான ரூ.2,57,877/-க்கும், அத்தொகைக்கு பின்வட்டி மற்றும் வியாச்சிய செலவு வகைக்கு இந்நிர் எதிர்மனுதார்

ரூ.4,00,000/-க்கான தகுந்த ரொக்க ஜாமீன் கொடுத்துப்போகும்படிக்கும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட இம்மனுவில் கண்டுள்ள சொத்துக்களை வழக்கின் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்துவைக்க உத்தரவிடக்கோரி, மனுதாரால் இம்மனு உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 38, விதி 5 மற்றும் பிரிவு 151ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு நிரூபணக்கூற்றின் சுருக்கம்:

பிரதான அசல் வழக்கானது, எதிர்மனுதாரிடமிருந்து மனுதாருக்கு 12.05.2021 தேதிய கடனுறுதிச்சீட்டின்பேரில் வரவேண்டிய தொகைகளை வசூலிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனு தபசில் சொத்து இந்நிர் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டது என்றும், எதிர்மனுதாருக்கு வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றும், எதிர்மனுதார், மனுதாருக்கு தரவேண்டிய தொகைகளை செலுத்தக்கூடாது என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறார் என்றும், இந்நிலையில் மனு தபசில் சொத்தை விற்றுவிட்டு திருப்பூருக்கு சென்றுவிட எதிர்மனுதார் கடந்த 30.10.2023 முதல் மிகத் தீவிரமாக முயற்சித்து வருகிறார் என்றும், அவ்வாறு எதிர்மனுதார் மனு தபசில் சொத்தை விற்பனை செய்துவிட்டால் தாவா பிராமிசரி நோட்டின்படி எதிர்மனுதாரிடமிருந்து மனுதாருக்கு வரவேண்டிய தொகையை வசூல் செய்யமுடியாமல் போய்விடும் என்றும், எனவே, எதிர்மனுதார், தாவா பிராமிசரி நோட்டின்படி மனுதாருக்கு வரவேண்டிய பிராது தொகை விபரத்தில் கண்ட தொகைக்கு ஈடாக, ஷை தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துவைக்கவேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட இம்மனுவில் கண்டுள்ள சொத்தினை வழக்கின் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்துவைக்க உத்தரவிடவேண்டுமென்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாருக்கு இந்நீதிமன்றத்தின் மூலம் அசல் வழக்கிலும், இம்மனுவிலும் அழைப்பாணைகள் சார்வாகியுள்ள நிலையில், எதிர்மனுதார் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், எதிர்மனுதார் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பாராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

மனுதார் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா?

என்பதேயாகும்.

5. இரு தரப்பிலும் யாதொரு சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தவில்லை. மனுதார் தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

6. **<u>தீர்வு</u>**:

பிரதான அசல் வழக்கானது, எதிர்மனுதாரிடமிருந்து மனுதாருக்கு 12.05.2021 தேதிய கடனுறுதிச்சீட்டின்பேரில் வரவேண்டிய தொகைகளை வசூலிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனு தபசில் சொத்து இந்நிர் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டது என்றும், எதிர்மனுதாருக்கு வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றும், எதிர்மனுதார், மனுதாருக்கு தரவேண்டிய தொகைகளை செலுத்தக்கூடாது என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறார் என்றும், இந்நிலையில் மனு தபசில் சொத்தை விற்றுவிட்டு திருப்பூருக்கு சென்றுவிட எதிர்மனுதார் கடந்த 30.10.2023 முதல் மிகத் தீவிரமாக முயற்சித்து வருகிறார் என்றும், அவ்வாறு எதிர்மனுதார் மனு தபசில் சொத்தை விற்பனை செய்துவிட்டால் தாவா பிராமிசரி நோட்டின்படி எதிர்மனுதாரிடமிருந்து மனுதாருக்கு

வரவேண்டிய தொகையை வசூல் செய்யமுடியாமல் போய்விடும் என்றும், எனவே, எதிர்மனுதார், தாவா பிராமிசரி நோட்டின்படி மனுதாருக்கு வரவேண்டிய பிராது தொகை விபரத்தில் கண்ட தொகைக்கு ஈடாக, ஷை தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துவைக்கவேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட இம்மனுவில் கண்டுள்ள சொத்தினை வழக்கின் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்துவைக்க உத்தரவிடவேண்டுமென்றும் மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

7. எதிர்மனுதார் அசல் வழக்கிலும், இம்மனுவிலும் ஆஜராகாதநிலையில், எதிர்மனுதாரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பாராக தீர்மானிக்கப்பட்டார்.

8. வழக்குக் கோப்பினை ஆராய்கையில், பிரதான அசல் வழக்கானது, 12.05.2021 தேதிய தாவா கடனுறுதிச்சீட்டின்படியான தொகையை எதிர்மனுதாரிடமிருந்து வரப்பற்ற மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரிடம் பெற்ற தொகையை செலுத்தக்கூடாது என்ற எண்ணத்துடன் எதிர்மனுதார் செயல்பட்டு வருகிறார் என்றும், எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்தை விற்றுவிட்டு திருப்பூருக்கு சென்று குடியேற எதிர்மனுதார் தீவிரமாக எத்தணித்து வருகிறார் என்றும், அவ்வாறு எதிர்மனுதார் தாவா சொத்துக்களை விற்றுவிட்டு திருப்பூர் சென்றுவிட்டால் தாவா கடனுறுதிச்சீட்டின்படி எதிர்மனுதாரிடமிருந்து மனுதாருக்கு வரவேண்டிய தொகையை வசூல் செய்யமுடியாமல் போய்விடும் என்றும் மனுதார் தரப்பில் குறிப்பிட்டுள்ளதற்கு ஆதரவாக, மனுதார் தரப்பில் மூன்றாம் நபர் நிரூபணஉறுதிக்கூற்று வாக்குமூலமும் மற்றும் தாவா சொத்துக்குரிய பதிவு ஆவணங்களும், வில்லங்கச் சான்றிதழும் வழக்குக் கோப்புடன் மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை சங்கதியை மறுத்து, எதிர்மனுதார் தன் தரப்பில் எதிருரை தாக்கல்

செய்யவோ, சாட்சியங்களை விசாரித்துக்கொள்ளவோ முன்வராமல் இந்நீதிமன்றத்தின் முன்பு தோன்றா தரப்பினராகியுள்ள நிலையில், எதிர்மனுதாருக்கு எதிரான அனுமானம் கொள்வதற்குத்தான் வழிவகை உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆக, அவ்வாறு மனுதார் தரப்பில் குறிப்பிடுவதுபோல், எதிர்மனுதார் தாவா சொத்துக்களை விற்றுவிட்டு வெளியூர் சென்றுவிட்டால் தாவா கடனுறுதிச்சீட்டின்படி எதிர்மனுதாரிடமிருந்து மனுதாருக்கு வரவேண்டிய தொகையை மனுதார் வசூல் செய்யமுடியாமல் போய்விடுவதுடன், மனுதாருக்கு மிகுந்த கஷ்டநஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அவ்வாறு எதிர்மனுதார் இந்நீதிமன்றத்தில் ஷை தொகையை வைப்பீடு செய்யும்பட்சம் எதிர்மனுதாருக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்பதிலும் எவ்வித ஐயப்பாடும் இல்லை. எனவே, தற்போதைய சூழலில் மனுதார் கோருவதுபோலான பரிகாரத்தை வழங்குவதுதான் நீதியின்பாற் உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு மனுதாருக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

## <u>தீர்வு</u>

9. இறுதியாக, இம்மனுவை அனுமதித்து, எதிர்மனுதாரிடமிருந்து மனுதாருக்கு வரவேண்டிய தொகையான ரூ.2,57,877/-க்கும், அத்தொகைக்கு பின்வட்டி மற்றும் வியாச்சிய செலவு வகைக்கு இந்நிர் எதிர்மனுதார் ரூ.4,00,000/-க்கு, ரொக்க ஜாமீனுக்காக இந்நீதிமன்றத்தில் வருகிற 03.10.2024 தேதிக்குள் வைப்பீடு செய்துவைக்கவேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட இம்மனுவில் கண்டுள்ள சொத்தினை வழக்கின் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. அழைக்க 04.10.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம் வி. பாலசுப்பிரமணியன்,
சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மனுதார் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மனுதார் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

ஒப்பம் வி. பாலசுப்பிரமணியன்,
சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்

அசல் வழக்கு எண்.443/2023-ல்
இடைநிலை மனு எண்.3/2024

உத்தரவு (அசல்/வரைவு)

நாள் 02.09.2024